# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1721/31 - 2011 සැප්තැම්බර් 03 වැනි සෙනසුරාදා - 2011.09.03

*1721/31 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ. 7/2011.*

**1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்**

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசியப் பகிரங்க சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான்,*

*(அ) 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசியப் பகிரங்க சேவைகள் சட்டத்திற்கான அட்டவணையில் "மின்சாரம் வழங்குதல்" எனக் குறித்துரைக்கப்பட்ட சேவையொன்றாகவுள்ள, 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சபைச் சட்டத்தினால் நியமிக்கப்பட்ட இலங்கை மின்சாரச் சபையினால் வழங்கப்பட்ட சேவைகள் இடையூறு செய்யப்படக்கூடிய அல்லது குழப்பக்கூடிய சாத்தியமுள்ளதெனவும், அத்துடன்*

*(ஆ) இச்சேவையைப் பேணுதல் சமுதாயத்தின் நிலைபேற்றுக்கு அத்தியாவசியமாகவுள்ளதெனவும்,*

*அபிப்பிராயப்படுவதனால், மின்சாரம் என்ற விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன்.*

*(i) அத்தகைய சேவை, சொல்லப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் நோக்கங்களுக்காக "அத்தியாவசிய பொதுச் சேவை" ஒன்றாக இருத்தல் வேண்டுமெனவும் ; அத்துடன்*

*(ii) 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினதும் 3 ஆம் பிரிவினதும் ஏற்பாடுகள், அவ்வாறு ஆக்கப்பட்ட கட்டளை தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டுமெனவும்,*

*இக்கட்டளைமூலம் வெளிப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2011, செத்தெம்பர் 03.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.